# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

## இரண்டாந் தவணைப்பரீட்சை – 2018

**வரலாறு**

**சுட்டெண் : ......................  தரம் – 10  நேரம் : – ஒரு மணி**

- **கவனிக்குக.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் விடையளிப்பதற்கு 1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே தெரிவு செய்து புள்ளடியை (X) இடுக.**

### பகுதி I

01. “டீகாவ” எனும் விளக்கமளிக்கும் உரை நூலாக (மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட உரைநூலாக) அமைவது.

(1) சிதாவக்கசட்டன  (2) பெரகும்பாசிரித்த
(3) வம்சத்தப்பகாசினி  (4) தாதுவம்சம்

02. இலங்கையின் இராசரட்டைக் கால வரலாற்றை அறிய உதவும் நூல் அல்லாதது.

(1) போதிவம்சம்  (2) தூப வம்சம்  (3) ராஜாவலிய  (4) பூஜாவலிய

03. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள பழைய துறைமுகமாக காணப்படும் மையம்.

(1) மகன  (2) ஜம்புகோளப்பட்டினம்
(3) பல்லவங்க  (4) உதிநகரம்

04. பௌத்த துறவிகள் பெற்றுக்கொண்ட வாழிடங்கள் தொடர்பாக பொதுவாக அறியப்படக் கூடிய விடயங்களை உள்ளடக்கிய கல்வெட்டுக்கள்.

(1) குகைக் கல்வெட்டு  (2) பாறைக் கல்வெட்டு
(3) தூண் கல்வெட்டு  (4) சுவர்க் கல்வெட்டு

05. பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட செப்பு நாணயம்

(1) கஹபண  (2) தம்பமஸ்ஸ  (3) புராண  (4) தரண

- பின்வரும் இலக்கியங்கள் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு 6, 7 மற்றும் 8ஆம் வினாவிற்கு விடை தருக.

A – செலலிகினி சந்தேசய
B – சத்தர்மாலங்கார
C – நிகாயசங்கிரஹய
D – கொன்ஸ் தந்தினுசட்டன

06. போர்க் காவியமாக அமைவது.

(1) A  (2) B  (3) C  (4) D

07. பௌத்த சாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்ட நூல்.

(1) A (2) B (3) C (4) D

08. தூது காவியம் என அழைக்கப்படுவது.

(1) A (2) B (3) C (4) D

09. கி.பி 7 – 8ஆம் நூற்றாண்டுகளுக்குரியதாகக் கருதப்படும் குதிரைத் தலையும் மனிதவுருவமும் உடைய செதுக்கல் தொடர்பான தவறான கூற்று.

(1) இசுறுமுனிய விகாரையில் செதுக்கப்பட்டுள்ளது.

(2) அநுராதபுரத்தில் அமைந்துள்ளது.

(3) குதிரைத்தலை அக்கினித் தெய்வத்தைக் குறிக்கும்

(4) மனித உருவம் மன்னனைக் குறிக்கின்றது.

10. ஆதிஹோமோ சேப்பியன் மனிதர்கள் இலங்கை வரலாற்றுடன் தொடர்புபடுவது.

(1) இலங்கையில் குடியேறிய முதல் மனித இனம் என்பதால்

(2) நாகரிகமான வாழ்வு ஒன்றை இவர்கள் கட்டியெழுப்பாமையால்

(3) இலங்கையில் ஒரு சில இடங்களில் மட்டும் வாழ்ந்தமையால்

(4) இவர்கள் பற்றி சரியான தகவல்களினை பெற முடியாமையினால்

11. இரணைமடுப் படிவு என அழைக்கப்படுபவை.

(1) இரணைமடுவில் மட்டும் காணப்படும் சரளைக் கற்களாகும்.

(2) கடற்கரையோரங்களில் காணப்படும் படிவுகளாகும்.

(3) கடற்கரையில் இருந்து 32 கிலோமீற்றர் தூரம் நாட்டின் உட்பிரதேசங்களில் காணப்படுபவையாகும்.

(4) மத்திய நாட்டில் காணப்படும் படிவுகளாகும்.

12. முன் வரலாற்றுக் காலத்தில் இனங் காணப்பட்ட பிரதான பண்புகளில் ஒன்று.

(1) நாடோடி வாழ்வு காணப்பட்டது.

(2) செப்பமற்ற கல்லாயுதம் பயன்பட்டது.

(3) கல்லாயுதம் மட்டுமன்றி உலோக மற்றும் மட்பாண்ட பயன்பாடு காணப்பட்டது.

(4) கற்குகைகளில் வெட்டவெளியில் மட்டும் மனிதப் பரம்பல் காணப்பட்டது.

- பின்வரும் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு 13ஆம் 14ஆம் மற்றும் 15ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - நிற வேலைப்பாட்டுடன் கூடிய மட்பாண்டம்

B - சிறிய அளவான கிராமக் குளங்கள்

C - இரும்பு யுகம்

D - சிறு கல்லாயுதங்கள்

13. முன் வரலாற்றுக் கால உடரஞ்சாமடம குடியிருப்பொன்றுடன் தொடர்புபட்டது.

(1) A (2) B (3) C (4) D

14. முன் வரலாற்று காலப் பகுதிக்குரிய சிறப்பான பெயராக அமைவது.

(1) A (2) B (3) C (4) D

15. குடியிருப்புகளின் பரம்பல் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ள உதவுபவை.

(1) A (2) B (3) C (4) D

16. கிரிந்தி ஓயாவிற்கு குறுக்கே அணை ஒன்றைக்கட்டி நீரை நிரப்பிய மன்னன்

(1) துட்டகைமுனு (2) வசபன் (3) இளநாகமன்னன் (4) முதலாம் அக்போ

17. இலங்கையின் நீர்ப்பாசனத்துடன் தொடர்புடைய தொல்பொருட் சான்றுகள் பெரிதும் கிடைப்பது.

(1) வரண்ட வலயத்தில் (2) உலர் வலயத்தில்

(3) ஈர வலயத்தில் (4) கரையோர வலயத்தில்

18. பருமகமாரிடம் காணப்பட்ட அதிகாரம் மத்தியை நோக்கி குவியும் செயற்பாட்டை அவதானிக்க முடிவது.

(1) பண்டுகாபயன் ஆட்சிக் காலம் (2) தேவநம்பியதீசன் ஆட்சிக் காலம்

(3) துட்டகைமுனு ஆட்சிக் காலம் (4) முதலாம் விஜயபாகு ஆட்சிக் காலம்

19. நிரல் I உடன் நிரல் II இனைத் தொடர்புபடுத்தும் பொழுது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| 1. விசிறி | A இழிநிலை |
| 2. அன்னம் | B தூய்மையான நிலை |
| 3. சந்திரப்பிறை | C அரசின் குறியீடு |
| 4. நாயும் காகமும் | D நிலையான பண்பு |

(1) C, D, B, A (2) A, C, B, D (3) D, C, A, B (4) C, B, D, A

20. இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளனாகக் கருதப்படும் மன்னன்.

(1) வசபன் (2) துட்டகைமுனு (3) மகாசேனன் (4) கஜபாகு

21. அநுராதபுரம் புத்தன்னே ஹெல எனும் இடத்தில் உள்ள கல்வெட்டின் மூலம் அறியப்பட்டது.

(1) வர்த்தகம் பற்றி (2) நீர்ப்பாசனம் பற்றி

(3) சட்டமுறை பற்றி (4) வைத்தியம் பற்றி

22. வெளிநாட்டு வர்த்தகம் செய்வதற்கு வேண்டிய துறைமுகமாக அநுராதபுர ஆட்சியாளருக்கும் பெரிதும் வேண்டப்பட்ட துறைமுகம்.

(1) ஜம்புகோளப்பட்டினம் (2) மகாதித்த

(3) சல்வத்தொட்ட (4) கலாதித்த

23. இலங்கையின் தெற்கே பிரதான கடற்கரையோர வர்த்தக நகரமாகக் காணப்பட்டது.

(1) சீனாநகரம் (2) அபநகரம் (3) கசபநகரம் (4) தேவகரம்

24. "கெதிஅட, கெடுகனக" என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவது.

(1) வியாபார வரியாகும் (2) நெல் வரியாகும்

(3)சேனைப் பயிர்ச்செய்கை வரியாகும் (4) கடவை வரியாகும்

25. மகிந்ததேரர் வருகையின் பின்பு இங்கு வாழ்ந்த பிக்குகள் பற்றிய அறிவை எமக்கு இன்றும் நேரடியாக தரவல்லவை.

(1) இலக்கியக் குறிப்புக்கள் (2) கல்வெட்டுக்கள்

(3) ஜாதகக் கதைகள் (4) விகாரைகள்

26. “கிதாப் அல் மஸ்லிக் வல் மமாலிக்” எனும் அரபுப் பூகோளவியல் நூலில் இலங்கை குறிப்பிடப்படுவது.

(1) செரண்டிப் என (2) நாகதீபம் என (3) சிலோன் என (4) தப்ரபேன் என

27. இலங்கையில் பல்மதகலாசார, பலபண்பாட்டு அடையாளங்கள் ஏற்படக் காரணமாக அமைந்தது.

(1) வளம்மிக்க நாடாக உள்ளமை

(2) பௌத்த மதம் பரவியமை

(3) வியாபார மைய நிலையமாக காணப்பட்டமை

(4) வளமான காலநிலை காணப்பட்டமை

28. “மின்னேரியாத் தெய்வம்” என அழைக்கப்பட்ட மன்னன்.

(1) வசபன் (2) காசியப்பன் (3) நிஸங்கமல்லன் (4) மகாசேனன்

29. ஒரே மன்னனின் பின்பு தொடர்ச்சியாக நான்கு சகோதரர்கள் ஆட்சியுரிமை பெற்றது.

(1) தேவநம்பியதீசனின் பின்பு (2) மகாசேனனின் பின்பு

(3) துட்டகைமுனுவின் பின்பு (4) வசப மன்னனின் பின்பு

30. ரூவன்வெலிசாய தாதுகோபத்திற்குப் பூஜை செய்வதற்கு தேவையான கண்ணாடி மணிகளை உரோமில் இருந்து வருவித்த மன்னன்.

(1) 6ஆம் அக்போ (2) கனிஸ்டதிஸ்ஸன் (3) கஜபாகு (4) உபதிஸ்ஸ மன்னன்

31. கொடவாயவில் உள்ள பழைய விகாரையில் கி.பி 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு மூலம் அறியப்படுவது.

(1) குளத்துவரி (2) சுங்கவரி (3) சேனைவரி (4) நிலவரி

32. பதுளைக் கல்வெட்டு எனப்படும் “சொர பொரவெவக்” கல்வெட்டை அமைத்த மன்னன்.

(1) முதலாம் உதயமன்னன் (2) மூன்றாம் உதயமன்னன்

(3) ஆமண்டகாமினி 4) நான்காம் மகிந்தன்

33. நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொல்லக் கூடாது என சட்டம் இயற்றிய மன்னன்.

(1) நிசங்கமல்லன் (2) ஐந்தாம் மகிந்தன்

(3) முதலாம் உதயமன்னன் (4) ஆமண்டகாமினி

34. “வஜ்ரசும்பட்ட” என்ற இடிதாங்கி பின்வரும் எந்த விகாரையைக் கட்டும் போது அதன் உச்சியில் பொருத்தப்பட்டது.

(1) அபயகிரி விகாரை (2) தூபராம விகாரை

(3) ஜேத்தவனராம விகாரை (4) ரூவன் வெலிசாய விகாரை

35. VOC எனும் நாணயத்தை பயன்படுத்தியவர்கள்.

(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர்

(3) ஆங்கிலேயர் (4) பிரான்சியர்

- **பின்வரும் அட்டவணையில் ஒன்றின் விடயங்கள் இரண்டின் விடயங்களுடன் தொடர்புபடும் விதம் குறித்து எழுதப்பட்ட வினாக்களுக்கு அவற்றைத் தொடர்புபடுத்தி விடை தருக.**

| அட்டவணை I | அட்டவணை II |
|---|---|
| 1. இராஜரட்டை நாகரிகம் | A கல்யாணவதி |
| 2. கலிங்கமாகன் படையெடுப்பு | B மூன்றாம் விஜயபாகு |
| 3. நிஸங்கமல்லன் | C பொலன்னறுவை இராசதானி |
| 4. சாகசமல்லன் | D இரண்டாம் நகராக்கம் |
| 5. தம்பதெனியா | E பலவீனமான ஆட்சியாளர் |

36. 1 இன் வீழ்ச்சியுடன் எழுச்சி பெற்றது.

(1) A (2) B (3) C (4) D

37. 2 இன் வருகையுடன் இல்லாமற்போன விடயம்

(1) A (2) B (3) C (4) D

38. 3 இன் பின் ஆட்சிப்பீடம் ஏறியவர்.

(1) A (2) B (3) C (4) D

39. 4 இன் ஆட்சியுடன் தொடர்புபடும் பதப்பிரயோகம்

(1) B (2) C (3) D (4) E

40. 5 இன் எழுச்சிக்கு காரணமாக அமைவது

(1) A (2) B (3) D (4) E

(40 x 2 = 80 புள்ளிகள்)